# முசிறி நகராட்சி

**2022-ஆம் ஆண்டு மார்ச் மாதம் (28.03.2022) 28-ஆம் தேதி திங்கட் கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் | தீர்மானம் |
|---|---|---|
| 28.03.2022 | அரசாணை எண்.117 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.07.12.2021–ன்படி முசிறி பேரூராட்சியை இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தி ஆணையிட்டதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழக நகர்ப்புறத்துறை அமைச்சர் மாண்புமிகு கே.என்.நேரு அவர்களுக்கும் நன்றி தெரிவித்து கொள்ளல். | தீர்மானம் எண்.1 நன்றி தெரிவித்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது |
| 28.03.2022 | <u>பொருள் - 1</u><br>முசிறி நகராட்சி ஆணையர் அவர்களின் ஜனவரி'2022 மற்றும் பிப்ரவரி'2022 மாதங்களுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.676/2021/அ)<br><u>அலுவலக குறிப்பு</u> :<br>அனுமதிக்கலாம் | தீர்மானம் எண்.2 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.03.2022 | **<u>பொருள் - 2</u>**<br>அரசாணை எண்.117 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.07.12.2021–ன்படி முசிறி பேரூராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. முசிறி நகராட்சி வளர்ந்து வரும் நகரமாக இருப்பதால் இந்நகராட்சிக்கு புதிய அலுவலகம் கட்டுவது மிகவும் அவசியமானதாகும். இந்நகராட்சிக்கு புதிய அலுவலகம் கட்டுவதற்கு தேவையான இரண்டு ஏக்கர் நிலத்திற்கு குறையாமல் அரசுக்கு சொந்தமான நிலத்தினை இந்நகராட்சிக்கு இலவசமாக வழங்கிட மாவட்ட ஆட்சித்தலைவர் திருச்சிராப்பள்ளி அவர்களிடம் கோருவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண்.708/2021/அ1)<br>அலுவலக குறிப்பு :<br>1) அனுமதிக்கலாம் | தீர்மானம் எண்.3<br>அனுமதிக்கப்பட்டது |
| 28.03.2022 | **<u>பொருள் - 3</u>**<br>அரசாணை எண்.117 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.07.12.2021–ன்படி முசிறி பேரூராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.25896/2021/ஐடி, நாள்.10.03.2022 –ல் புதிதாக தரம் உயர்த்தப்பட்டுள்ள நகராட்சிகள் தற்போது நகராட்சி நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நகராட்சிகளில் பயன்படுத்தப்பட்டுவரும் UTIS ( Urban Tree Info System Software ) மென்பொருள் பயன்படுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.341/2022/அ) | தீர்மானம் எண்.4<br>பதிவுசெய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.03.2022 | **<u>பொருள் - 4</u>**<br>முசிறி நகராட்சியின் வருவாய் நிதி (Revenue fund) மற்றும் குடிநீர் வழங்கல் நிதி (Water supply fund)-க்கான **2022–2023–ம்** ஆண்டிற்கான வரவு செலவு விபரம் (Budget) மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண். 404/2022/அ1)<br>அலுவலக குறிப்பு :<br>ஒப்புதல் அளிக்கலாம். | தீர்மானம் எண்.5 ஒப்புதல் அளிக்கப்பட்டது. |
| 28.03.2022 | **<u>பொருள் - 5</u>**<br>அரசாணை (நிலை) எண்.117, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.07.12.2021 ல் முசிறி தேர்வுநிலை பேரூராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் அடிப்படை பிரச்சினைகளான பொது சுகாதார பணிகள், குடிநீர் பணிகள், மின்விளக்கு பணிகள், இதர திட்டப்பணிகள் ஆய்வு செய்வதற்கு நகராட்சியின் ஈப்பு எதுவும் இல்லை. இந்நகராட்சியில் மொத்தம் 24 வார்டுகள் உள்ளன. அவைகளை தினமும் நகராட்சி ஆணையர் ஆய்வு செய்வதற்கு ஏதுவாக வாகனம் ஏதும் இல்லாததாலும், உயர் அலுவலர்களால் நடத்தப்படும் ஆய்வுக் கூட்டத்திற்கு செல்வதற்கு வாகனம் தேவைப்படுவதாலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.1725/2022/எம்3, நாள்.24.02.2022–ல் வழங்கியுள்ள அறிவரைகளின்படி, நகராட்சி ஆணையரின் அலுவலக பயன்பாட்டிற்கு ஒரு வாகனம் வாங்குவதற்கு நகராட்சி மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்புவதற்கு மன்ற அனுமதிக்கு.,<br>மேற்கண்ட வாகனம் அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் (GEM Rate) வாங்குவதற்கும், அதற்கான செலவுத்தொகை ரூ.14,00,000/- க்கு பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண்.194/2022/அ1) | தீர்மானம் எண்.6 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு** :<br>மேற்கண்ட வாகனம் நகராட்சி ஆணையரின் அலுவலக பணி, ஆய்வுப்பணிகளுக்கு தேவைப்படுவதால் வாகனம் GEM RATE விலையில் வாங்கவும், அதற்காகும் செலவு ரூ. 14,00,000/- க்கு மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| **28.03.2022** | **<u>பொருள் - 6</u>**<br>முசிறி நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 24 வார்டுகளிலும் தூய்மை பணிகள் மேற்கொள்ள, பிளிச்சிங் பவுடர், சுண்ணாம்பு, பினாயில், கொசுமருந்து மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு தேவையான தளவாட சாமான்கள் 2022-2023ஆம் ஆண்டிற்க்கு வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.,<br>**(ந.க.எண். 398/2022/அ1)**<br>**அலுவலக குறிப்பு :**<br>அனுமதிக்கலாம் | தீர்மானம் எண்.7<br>அனுமதிக்கப்பட்டது |
| **28.03.2022** | **<u>பொருள் - 7</u>**<br>முசிறி நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 24 வார்டுகளில் மொத்தம் 4 உயர் கோபுர விளக்குகள், 6 எல்.இ.டி விளக்குகள், 18 சோலார் பல்புகள், 3 சோடியம் விளக்குகள், 880 எல்.இ.டி பல்புகள், 1335 குழல் விளக்குகள், 35 சி.எப்.எல் பல்பு ஆகிய தெருவிளக்குகள் பராமரிப்பு செய்வதற்கு தேவையான மின் விளக்குகள், மின் உதிரி சாமான்கள் 2022-2023ஆம் ஆண்டிற்க்கு வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>(ந.க.எண். 401/2022/அ1)<br>**அலுவலக குறிப்பு :**<br>அனுமதிக்கலாம் | தீர்மானம் எண்.8<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.03.2022 | **<u>பொருள் - 8</u>**<br>முசிறி நகராட்சியில் வரியினங்கள் மற்றும் வரியில்லா இனங்கள் வசூல் செய்வது தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வு செய்திடவும், ஆட்டோ விளம்பரம் மூலம் 2022–2023ஆம் ஆண்டிற்க்கு அறிவிப்பு செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண். 405/2022/அ1)<br>**அலுவலக குறிப்பு :**<br>அனுமதிக்கலாம் | தீர்மானம் எண்.9 அனுமதிக்கப்பட்டது |
| 28.03.2022 | **<u>பொருள் - 9</u>**<br>முசிறி நகராட்சியில் 2022–2023–ம் ஆண்டிற்க்கு பொது ஏல விளம்பரம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் மாவட்ட மக்கள் செய்தி தொடர்பு அலுவலகம் மூலம் வெளியிடுவதற்கும் உண்டாகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண்.215/2022/அ1)<br><u>அலுவலக குறிப்பு</u> :<br>அனுமதிக்கலாம் | தீர்மானம் எண்.10 அனுமதிக்கப்பட்டது |
| 28.03.2022 | **<u>பொருள் - 10</u>**<br>முசிறி நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு செய்த வகையில் உபயோகமற்ற குழல் விளக்கு அலுவலக வளாகத்தில் உள்ளது. மேற்படி உபயோகமற்ற குழல் விளக்கு பொது ஏலத்தின் மூலம் அப்புறப்படுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> :<br>1) அனுமதிக்கலாம் (ந.க.எண்.402/2022/அ1) | தீர்மானம் எண்.11 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.03.2022 | **<u>பொருள் - 11</u>**<br>முசிறி நகராட்சியில் மொத்தம் 24 வார்டுகளுக்கு சொந்த குடிநீர் திட்டத்தின் மூலம் தினந்தோறும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது மேற்படி, குடிநீர் திட்டத்தின் உள்ள தலைமை நீரேற்று நிலையம் மற்றும் அங்கிருந்து அனைத்து மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு மோட்டார்கள் மூலம் நீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி நீரேற்று நிலையத்தில் உள்ள மோட்டார்கள் குழாய்கள் மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டி வரை உள்ள குழாய்களில் ஏற்படும் சிறு பழுதுகள் மற்றும் உடைப்புகள் ஆகியவைகளை உடனடியாக சரிசெய்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு குடிநீர் விநியோகம் செய்ய வேண்டி உள்ளது.<br>மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>ந.க.எண்.406/2022/அ1,<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். | தீர்மானம் எண்.12<br>அனுமதிக்கப்பட்டது |
| 28.03.2022 | **<u>பொருள் - 12</u>**<br>முசிறி நகராட்சியில் மொத்தம் 24 வார்டுகளுக்கு சொந்த குடிநீர் திட்டத்தின் மூலம் தினந்தோறும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது மேற்படி, குடிநீர் திட்டத்தின் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து குழாய்கள் வழியாக அனைத்து குடிநீர் இணைப்புகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி விநியோகம் செய்யப்படும் இடங்களில் வார்டு 1 முதல் 24 வார்டு வரை விநியோகம் செய்யப்படும் குழாய்களில் அவ்வபோது ஏற்படும் சிறு பழுதுகள் மற்றும் உடைப்புகள் ஆகியவைகளை உடனடியாக சரிசெய்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு குடிநீர் விநியோகம் செய்ய வேண்டி உள்ளது. | தீர்மானம் எண்.13<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை நகராட்சி **குடிநீர்** நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>ந.க.எண்.406/2022<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். | |
| 28.03.2022 | **<u>பொருள் - 13</u>**<br>முசிறி நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார பிரிவில் பயன்பாட்டில் உள்ள கீழ்கண்ட வாகனங்களுக்கு காப்பீடு செய்வதற்கும், அதற்குண்டான செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>டிராக்டர் – 1 எண்ணிக்கை ( வண்டி எண். TN48H7835 )<br>மினி லாரி – 1 எண்ணிக்கை ( வண்டி எண். TN48AZ7725 )<br>Tata Ace – 1 எண்ணிக்கை ( வண்டி எண்.TN48AR9056 )<br>**(ந.க.எண். 403/2022/அ1)**<br><u>அலுவலக குறிப்பு</u> :<br>அனுமதிக்கலாம் | தீர்மானம் எண்.14 அனுமதிக்கப்பட்டது |
| 28.03.2022 | **<u>பொருள் - 14</u>**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.**21191/2021/**அம்ரூட்/**2** நாள்.**10.03.2022**ன் படி முசிறி நகராட்சி பகுதிகளில் **15** – வது நிதிக்குழு மானியம் (15 CFC Tied and UnTied Grant) **2021–22** ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் முறையே ரூ.**57.86** மற்றும் **38.58** இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு கீழ்கண்டவாறு பணிகள் தேர்வு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | தீர்மானம் எண்.15 அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| **Tied Grand** | | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட பொது சுகாதாரப் பணிக்கு 7(BOV) பேட்டரி வாகனம் வாங்குதல் | 12.60 |
| 2 | இந்நகராட்சிக்குட்பபட்ட பொது சுகாதாரப் பணிக்கு 2(LCV) மினி ஆட்டோ வாங்குதல் | 16.60 |
| 3 | இந்நகராட்சிக்குட்ப்பட்ட 1 முதல் 24 வார்டுகளுக்கு மழைநீர் சேகரிப்பு வசதி செய்தல் | 9.40 |
| 4 | இந்நகராட்சிக்குட்ப்பட்ட வார்டு 3, 5, 8, மற்றும் 20 வார்டுகளுக்குட்ப்பட்ட அந்தரப்பட்டி சாலை கோவில் எதிர்புறம் உள்ள வடக்குத்தெரு, துறையூர் சாலை நடராஜர் நகர், காமாட்சி நகர் விரிவு சி.எம். நகர் மற்றும் சிவகாமி நகர் விரிவு ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் பகிர்மான குழாய் நீட்டிப்பு செய்தல் | 9.50 |
| 5 | இந்நகராட்சிக்குட்ப்பட்ட வார்டு 1,3 மற்றும் 8 தாதம்பட்டி சாலை சரோஜா கிரஸ்சர் அருகில், தா.பேட்டை சாலை சோழன் நகர் அருகில் மற்றும் நடராஜர் நகர் பிள்ளையார் கோவில் அருகில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து சிறு நீர்மூழ்கி மின்மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்தல் | 9.90 |
| | மொத்தம் | 58.00 |
| **Un-Tied Grand** | | |
| 6 | இந்நகராட்சிக்குட்ப்பட்ட வார்டு 2 கலப்பு காலனி பகுதிக்கு மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 19.60 |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>7</td><td>இந்நகராட்சிக்குட்ப்பட்ட வார்டு 8 அன்னை நகர் மண்சாலையை பேவர் பிளாக் தளமாக மாற்றி அமைத்தல்</td><td>9.70</td></tr>
<tr><td>8</td><td>இந்நகராட்சிக்குட்ப்பட்ட வார்டு 9 இளங்கோ நகர் மண்சாலையை பேவர் பிளாக் தளமாக மாற்றி அமைத்தல்</td><td>9.70</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>39.00</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>97.00</td></tr>
</table>
ந.க.எண். 374/ 2022 / அ<br>
<u>அலுவலகக்குறிப்பு:–</u><br>
1) மன்றம் பதிவு செய்யலாம்.<br>
2) மேற்படி பணிக்கு திட்ட நிதி ஒதுக்கீடு போக மீதி தொகை. ரூ.0.56 இலட்சத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து ஈடுசெய்யலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>28.03.2022</td>
<td>
<u>பொருள் - 15</u><br>
முசிறி நகராட்சியில் UTIS ( Urban Tree Info System Software ) மென்பொருள் பயன்படுத்தி அனைத்து பணிகளையும் கணினி மையமாக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.25896/2021/ஐடி, நாள்.10.03.2022 –ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள ஏதுவாக கீழ்கண்ட விபரப்படி கணினி மற்றும் பிரிண்டர் அரசு நிர்ணயித்துள்ள (GEM Rate) விலையில் நகராட்சி பொதுநிதியில் இருந்து வாங்கலாம்.<br>
1. கணினி – 3 எண்ணிக்கை<br>
2. Dot Matrix பிரிண்டர் – 1 எண்ணிக்கை<br>
3. Multi Purpose பிரிண்டர் – 1 எண்ணிக்கை<br>
4. UPS Inverter and Battery – 2 எண்ணிக்கை<br>
ந.க.எண்.341/2022/அ<br>
<u>அலுவலகக்குறிப்பு:–</u><br>
மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>தீர்மானம் எண்.16 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 28.03.2022 | **<u>பொருள் - 16</u>**<br>முசிறி நகராட்சி பேருந்து நுழைவு கட்டணம் துறை மூலம் வசூலிக்கப்பட்டு வருகிறது. மேற்படி துறை மூலமாக வசூலிக்கப்படுவதற்கு ரசீது புத்தகங்கள் தமிழ்நாடு மல்டி பர்பஸ் இன்ட்கோ சர்வ் நிறுவனத்திடம் இருந்து அச்சடிப்பதற்கும், அதற்கான செலவினத் தொகையை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>ந.க.எண். 408 / 2022 /அ,<br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண்.17<br>அனுமதிக்கப்பட்டது |
| 28.03.2022 | **<u>பொருள் - 17</u>**<br>முசிறி நகராட்சி பேருந்து நுழைவு கட்டணம் துறை மூலம் வசூலிக்கப்பட்டு வருகிறது. மேற்படி துறை மூலமாக வசூலிக்கப்படுவதற்கு ரசீது புத்தகங்கள் தமிழ்நாடு மல்டி பர்பஸ் இன்ட்கோ சர்வ் நிறுவனத்திடம் இருந்து அச்சடிப்பதற்கும், அதற்கான செலவினத் தொகையை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>ந.க.எண். 408 / 2022 /அ,<br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண்.18<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.03.2022 | **<u>பொருள் - 18</u>**<br>முசிறி பேரூராட்சியை அரசாணை எண்.117, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள். 07.12.2021 – ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு முசிறி நகராட்சியினை 24 வார்டுகளாக பிரிக்கப்பட்டு, நகராட்சி தேர்தல் நடத்தப்பட்டு 24 வார்டுகளுக்கும் நகர்மன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தலைவர், துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் பதவியேற்றுள்ளனர். முசிறி பேரூராட்சியாக செயல்பட்டபோது 18 வார்டுகள் மட்டுமே இருந்தது.<br>தற்போது 24 வார்டுகளாக உள்ளதால் மன்ற உறுப்பினர்களுக்கான நாற்காலிகள் 17 மட்டுமே உள்ளதை கூடுதலாக 5 நாற்காலிகள் மற்றும் 24 நாற்காலிகளுக்கு புதிதாக மேல் உறைகள் மற்றும் நகர்மன்ற கூட்ட அறையில் மேடை மற்றும் புதிதாக மேசைகள் அமைக்கவும், நகர்மன்ற கூட்டத்தில் அலுவலக உபயோகத்திற்கு புதிதாக 10 நாற்காலிகள், 5 மின்விசிறிகள் மற்றும் நகர்மன்ற தலைவர் அறைக்கு நாற்காலி மற்றும் மேசை வாங்குவதற்கும், பராமரிப்பு செய்வதற்கும் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ளலாம். அதற்கான செலவினத் தொகையினை பொதுநிதியில் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதிக்கு.,<br>ந.க.எண்.409/2022/அ1,<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மானம் எண்.19<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.03.2022 | **<u>பொருள் - 19</u>**<br>முசிறி நகராட்சி, முசிறி மேற்கு கிராமம் புல எண்.5/2B1B மற்றும் 5/2B2 ல் அமையும் 2.325 ஏக்கர் நிலத்தில் திரு.P.பாலசுப்ரமணியன் மற்றும் திருமதி Bருக்மணி ஆகியோர்களது மனைப்பிரிவிற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவிற்கு வளர்ச்சி கட்டணம் ரூ.35.90 இலட்சம் பெறப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட இடத்தில் தார்சாலைகள் அமைப்பதற்கும், சாலையோரங்களில் தெருவிளக்குகள் அமைப்பதற்கும், மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைப்பதற்கும் மன்ற அனுமதிக்கு.,<br>(ந.க.எண்.28/2022/அ1)<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1.மனைப்பிரிவிற்கு வளர்ச்சி கட்டணமாக பெறப்பட்ட ரூ.35.90 இலட்சத்திற்குட்பட்டு பணி மேற்கொள்ளலாம்.<br>2.மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மானம் எண்.20 அனுமதிக்கப்பட்டது |
| 28.03.2022 | **<u>பொருள் - 20</u>**<br>முசிறி நகராட்சி எல்லைக்குட்பட்ட வேளங்காநத்தம் சாலையில் வளம் மீட்பு பூங்கா அருகில் மாணிக்கம் நகர் செல்லும் சாலையில் மையத்தில் அமைந்துள்ள மின் கம்பத்தினை பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளதால் அதனை பொதுமக்கள் நலன் கருதி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், முசிறி மூலம் மாற்றி அமைத்திடவும், அதற்கான செலவினத்தினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.,<br>(ந.க.எண்.410/2022/அ1)<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மானம் எண்.21 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.03.2022 | **பொருள் - 21**<br>முசிறி நகராட்சி பரிசல் துறை ரோட்டில் பொதுமக்கள் நலன் கருதி ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆழ்துளை போர்வெல் கிணற்றுடன் கூடிய மினி பவர் பம்ப் சிண்டெக்ஸ் தொட்டி புதிதாக அமைப்பதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.,<br>(ந.க.எண்.407/2022/அ1)<br><br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மானம் எண்.22<br>அனுமதிக்கப்பட்டது |
| 28.03.2022 | **பொருள் - 22**<br>முசிறி நகராட்சி பேரூராட்சியாக செயல்பட்டபோது வரி மற்றும் வரியில்லா இனங்கள் மற்றும் கணக்குகள் பிரிமேட்டிக்ஸ் சாப்ட்வேர் பிரைவேட் லிமிடெட், ஓசூர் என்ற நிறுவனத்தின் இணையதளம் மென்பொருள் மூலமாக பதிவேற்றம் மற்றும் பயன்படுத்துதல் விவரங்களை பராமரிப்பதற்கு ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2022 ஆம் மாதம் வரையிலான 34 மாதங்களுக்கான மென்பொருள் பராமரிப்பு கட்டணம் மற்றும் இதர கட்டணம் தொகை ரூ. 1,59,300/- ஐ வழங்க வேண்டி திருச்சிராப்பள்ளி மண்டலம், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் குறிப்பாணை கடிதம் ந.க.எண்.130/2022/பே3, நாள்.25.01.2022 உடன் இணைத்து வரப்பெற்ற பிரிமேட்டக்ஸ் சாப்ட்வேர் சொலுசஷன் பிரைவேட் லிமிடெட், ஓசூர் நிறுவனத்தின் கேட்பு பட்டியலின் படி தொகை ரூ.1,59,300/- ஐ நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.,<br>(ந.க.எண்.97/2022/அ)<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மானம் எண்.23<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.03.2022 | **<u>பொருள் - 23</u>**<br>முசிறி நகராட்சி பகுதியில் பொதுமக்கள் நலன் கருதி குற்றச் செயல்கள் ஏதும் நிகழாவண்ணம் தடுத்திடும் பொருட்டு முசிறி நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் சி.சி.டிவி கேமரா பொருத்துவதற்கு மன்றத்தின் அனுமதி கோருதல்<br>(ந.க.எண்.365/2022/அ)<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மானம் எண்.24<br>அனுமதிக்கப்பட்டது |

ஒப்பம்/– சி. கலைச்செல்வி
நகர்மன்றத் தலைவர்
முசிறி நகர்மன்றம்

// உண்மை நகல் //

**ஆணையர்**
**முசிறி நகராட்சி**